## பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்

# சட்டம்-ஒழுங்கு பற்றி ஆளுநர் சொல்வாரா?

50 ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் இருக்கும் போது நம்தலைவர் கடந்து வந்த பாதையில் கற்கள் முட்கள், கசையடிகள், காதில் கேட்க முடியாத வசைச் சொற்கள், ஆட்சியாளர்களின் அராஜக தாண்டவங்கள், சிறைத் தண்டனை கொடுமைகள், அவமானங்கள் அடக்குமுறைகள் என அத்தனையையும் கடந்து எதிர் கொண்டு சீனாவின் மாசே துங் மஞ்சள் நதியை கடந்து சென்று தன் உடல் திறன் மற்றும் மனத்துணிவை சீன மக்களுக்கு காட்டியதைப் போல் திராவிட இயக்க வரலாற்றில் முத்தமிழறிஞர் கலைஞருக்குப் பிறகு தமது தளராத உழைப்பால் நெருப்பாற்றில் நீந்தி சவால்களை வென்று நிருபித்துக் காட்டித் தலைவரானவர் தான் நம் முதல்வர் அண்ணன் தளபதி.

நமது அரசு திராவிட மாடல் அரசு “சொல்லாததையும் செய்வோம் சொல்லாமலும் செய்யும்” என்ற புதிய கொள்கையோடு எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திட இடையறாது, இரவு பகல் பாராது உழைப்பவர் தான் நம் முதல்வர் அண்ணன் தளபதி. அவரோடு பழகியவர்கள் மற்றும் பழகும் வாய்ப்பை பெற்றவர்கள் அவரிடமிருந்து பாசத்தை பெறலாம்! அருகிலிருந்து பார்க்க வாய்ப்பு கிடைக்காதவர்கள் அவர் மக்களுக்காகச் சிந்தித்து தரும் திட்டங்களைப் பார்க்கலாம், பயன்பெறலாம்.

முதல்வர் நல்லவராம்! ஆனால் அதே முதல்வர் இந்தியா முழுவதும் அனைவருக்கும் சமூக நீதி கிடைத்திட திராவிட மாடல் ஆட்சி தேவை என்பது தேவையில்லாத ஒன்றாம் ஆளுநர் ரவி உளறிக் கொட்டியிருக்கிறார்.

ஒன்றிய அரசு உளவு வேலை பார்ப்பதற்கு ஒரு மாநிலத்திற்கு அனுப்பப்படும் நபர் தான் ஆளுநர். மக்கள் சக்தியும் தனிபலமும் இல்லாத மனிதர் தான்.

ஆளுநர் ரவி சமையலறை கட்ட மட்டும் 5 கோடி தந்ததாக கூறும் கை சுத்தமான கடமை வீரர். தான் வகிக்கும் பொறுப்பின் மதிப்பை மறந்து தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாக கதை விடுத்துள்ளார். பொள்ளாச்சி சம்பவம் போல் தி.மு.க ஆட்சியில் மக்கள் காறி உமிழும் நிகழ்ச்சி எதுவும் நடைபெறவில்லை என்பது ஆளுநருக்கு தெரியாதா?

இவரைப் போன்ற ஆளுநர் இருப்பதை விட ஆட்டுக்கு தாடி இருப்பதே மேல் என்று கருதுகிறேன். ஒற்றர் வேலையை மட்டும் பாருங்கள், உங்கள் இருப்பை காட்டிக் கொள்ள அவ்வப்போது பித்தம் தலைக்கேறியவரைப் போல் உளறாதீர்கள்.

நாகாலாந்தில் நீங்கள் இருந்த போது எப்படி செயல்பட்டீர்கள் என்பது நாறிக்கிடக்கிறது. அம் மாநில மக்கள் உங்களைப் பற்றி பேசினாலே கோபத்தின் உச்சிக்கே சென்று கொட்டுகிற வார்த்தைகள் பிரசுரிக்க முடியாதவைகளாக இருக்கின்றன.

ஜக்தீப் தன்வர் போல் ஏதாவது உயர் பதவி வேண்டுமென்றால் கேட்டுக் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு தொல்லை தரும் அரசியல் அரிப்புக்கு நீங்கள் தான் சொறிந்து கொள்ள வேண்டும். நாங்கள் சுயமரியாதைக்காரர்கள். எங்களிடம் அதையெல்லாம் எதிர்பார்க்காதீர்கள்.

திராவிட மாடல் என்பது மக்களை பிரித்திடுமாம். தமிழ் ஆங்கிலம் மட்டும் பள்ளிகளில் கற்றுத் தரப்படுகிறது என்கிறார். 8-வது அட்டவணையில் உள்ள மொழிகளிலெல்லாம் பாடம் கற்றுத் தர வேண்டுமென்கிறாரா?

அவரது நோக்கமெல்லாம் சமஸ்கிருதம், இந்தி மொழியை தமிழ் நாட்டில் திணிக்க முடியவில்லையே என்கிற வருத்தம். அதனால் தான் அப்படி அறியாமையில் பேசி வருகிறார். ஆளுநர் ரவிக்கு அறிஞர் அண்ணா காலத்திலிருந்து தி.மு.க.வின் கொள்கை இரு மொழிக் கொள்கை தான் என்பது தெரியாது. கலைஞரும் அதைத்தான் பின்பற்றினார். தற்போது நம் முதல்வரும் அதைத்தான் செய்கிறார்.

இந்தியா ஒரே நாடாம், பாரதம் ஒரே நாடாம், தமிழ் நாடு என்று தனியாக ஒன்று இருந்த தில்லையாம். என்றைக்கு இந்தியா ஒன்றாக வந்தது? தானாக இந்தியா உருவாகவில்லை. 565 சமஸ்தானங்களாக இருந்த பகுதிகளை தங்களது நிர்வாக வசதிக்காக பிரிட்டிசார் ஒன்றாக்கினர்.

அதன்பிறகு சுதந்திர இந்தியாவில் ஹைதராபாத் போன்ற சில சமஸ்தானங்கள் இணைய மறுத்த போது சர்தார் வல்லபாய் பட்டேல் இராணுவத்தை காட்டி மிரட்டி இந்தியாவுடன் இணைத்தார். இந்த வரலாறு ஆளுநர் ரவிக்கு தெரியாமல் உளறிகொட்டு கிறார்.

தந்தை பெரியார் தற்போது இல்லை, இருந்திருந்தால் ரவி சட்டையைக் கிழித்துக் கொண்டு ஓட்டம் பிடித்திருப்பார். தந்தை பெரியார் தனித் தமிழ்நாடு கேட்ட முதல் நபர் என்பது அவருக்கு எங்கே தெரியப் போகிறது?

அதைப்போலத்தான் பேரறிஞர் அண்ணா ஜவஹர்லால் அவையில் பிரதமராக இருந்தபோதே திராவிட நாடு கேட்டவர். சீன யுத்தம் வந்ததால் இந்தியா ஒன்றாக இருந்தால் தான் நமது நாடு காக்கப்படும் என்று திராவிட நாடு கொள்கையை கைவிட்டவர் பேரறிஞர் அண்ணா. அண்ணா பிரிவினை வாதியா? திராவிடம் என்றால் பிரிவினை பேசுவதாக அர்த்தமா?

முத்தமிழறிஞர் கலைஞர் மாநில சுயாட்சி வேண்டுமென்றார். அதென்ன பிரிவினை வாதமா? சகோதரத்துவம், மாநில உரிமை, சமத்துவம், சமூக நீதி காக்கப்படும். அது தான் திராவிட மாடல்.

அந்த திராவிட மாடல் முறையைத்தான் இந்தியா முழுவதும் கொண்டு வர நம் முதல்வர் அழைப்பு விடுத்தார். பா.ஜ.க. சாராத பல முதல்வர்கள் ஆதரவு தந்துள்ளனர். இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் ரவியை தூண்டிவிட்டதால் திராவிட மாடல் காலாவதியான ஒன்று என்று கூறுகிறார்.

ஹிட்லரின் நாசிசம், முசோலினியின் பாசிசம், கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் ஏங்கல்ஸ், லெனின் போன்றோரின் கம்யூனிசம், பணக்கார வர்க்கத்தின் கேப்டலிசஸம், பா.ஜ.க.வின் இந்துத்துவா என்பதைப் போல் திராவிட இயக்கத் தலைவர்களின் கொள்கை தான் திராவிட மாடல் என்கிற திராவிடவியல் ஆகும். இதில் ரவி நாசிசம், பாசிசம் வகையை சேர்ந்தவர்.

இப்போது புரிகிறதா, திராவிட மாடல் என்ன என்பது! திராவிட மாடல் இல்லையென்றால் இந்தியா இல்லை. இந்தியா இருக்க வேண்டுமென்றால் திராவிட மாடல் இருக்க வேண்டும்.

மூத்தமொழி தமிழ்தான் என்று நீண்ட ஆய்வுக்கு பிறகு பிரதமர் மோடி ஒத்துக் கொண்டுள்ளார். ஆளுநரே! பிரதமர் மோடியிடம் கூறி சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் 640 கோடிக்களை போல் மூத்த மொழி தமிழ் வளர்ச்சிக்கு அதே அளவாவது நிதி ஒதுக்கச் சொல்லுங்கள்.

சட்ட ஒழுங்கு சரியில்லையென்று கூறும் ஆளுநரே! பா.ஜ.க. ஆளும் மணிப்பூர் மாநிலம் எரிவதைப் போல தமிழ்நாடு எரியவில்லை என்று வருத்தமா? நேற்று உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் சந்திர சூட் அவர்கள் ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கும் போது இந்தியாவில் தமிழகம் தான் அமைதியான மாநிலம், பொய்யாக பரப்புரைகளை செய்து அமைதியைக் கெடுக்காதீர்கள் என்று கூறியுள்ளார்.



**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இதற்குப் பிறகாவது ஆளுநர் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறாமல் இருப்பாரா? அடிக்கடி பொய் சொல்வது அவருக்கு கைவந்த பழக்கம் போல, அவரது பொய் தமிழ்நாட்டில் எடுபடாது.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு இராணுவத்தையும், வீரர்களையும் உங்களால் ஒழுங்காக காப்பாற்ற முடிகிறதா? கார்கில் யுத்தம் வந்த போது எத்தனைப் பேர் மாண்டார்கள், எவ்வளவு உயிர் சேதம், பணவிரயம், அமைதியின்மை, இறந்த இராணுவ மாவீரர்களின் குடும்பங்கள் குறிப்பாக மனைவி மக்கள் பட்டத் துயரங்கள் எழுத கூடியதா?

2020ல் கல்வான் பள்ளத்தாக்கில் சீன ராணுவத்தினர் அத்துமீறி இந்திய எல்லைக்குள் புகுந்து கூரிய ஆயுதங்களால் இந்திய இராணுவத்தினர் 20 பேரை படுகொலை செய்தனர். இதுவும் பா.ஜ.க. ஆட்சியில் தான். புல்வாமா தாக்குதல் வீரர்கள் ஹெலிகாப்டர் கேட்டும் மோடி அரசு தரமறுத்ததால் சாலை வழியாக வாகனங்களில் சென்றவர்கள் 40 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதை அன்று காஷ்மீர் ஆளுநராக இருந்த சத்தியபால் மாலிக் தான் கூறினார்.

கடந்த வாரம் ஜம்மு காஷ்மீரிலுள்ள ரஜௌரி பூஞ்ச் செக்டரில் பயங்கரவாதிகளால் 5 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதே பகுதியில் வனப்பகுதியில் 2021 அக்டோபர் மாதம் 9 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர், அதில் 7 பொதுமக்களும் பலி.

இரண்டு நாட்களுக்கு முன்பு இராணுவத்தினர் ஜம்மு பகுதியில் 5 பேர் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

சத்திஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்கள் தாக்குதலில் சி.ஆர்.பி.எப்.யின் காவலர்கள் 11 பேர் கொல்லப்பட்டனர். இப்படி சில தான் குறிப்பிட்டுள்ளோம். ஆளுநர், பிரதமர் மோடி ஆட்சியின் சட்ட ஒழுங்குக்கு நாம் கொடுத்துள்ள சிறிய அளவு சான்றுகள் போதுமா?

உத்திரப்பிரதேசத்தில் 1000-க்கணக்கான என்கவுண்டர்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 187 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயத்துடன் தப்பியுள்ளதாக கதை விட்டுள்ளனர்.

எத்தனைப்பேர்கொல்லப்பட்டார்கள்என்றஉண்மை மறைக்கப்பட்டுள்ளது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு நிலையைப் பற்றி தமிழ்நாட்டின் ஆளுநர் ரவி என்ன சொல்லப் போகிறார்?

ஆளுநர் தேவையில்லாமல் கழக அரசை சீண்ட வேண்டாம். நம் முதல்வரோ தேவையற்ற பொய்ப் புரட்டுகளுக்கு பதில் தரமாட்டார். ஆனால் உங்களுக்கு பதில் தர நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழ்நாட்டில் நாகாலாந்திலிருந்து விரட்டப்பட்டதைப் போல் தமிழ் நாட்டிலிருந்தும் விரட்டப்படுவீர்.

**“ஆளுநர் அவர்களே! சரக்கு இருந்தால் சவால் விடுக! இல்லையேல் சலாம் போட்டு தமிழ்நாட்டை விட்டு ஓடிவிடுக!”**



உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, மரக்காணம் எக்கியார் குப்பத்தில் சாராயம் குடித்ததன் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டு உயிர் இழந்தவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மேலும் புதுச்சேரி பிம்ஸ், ஜிப்மர் மற்றும் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட எஸ்.பி. நாதா, புதுச்சேரி சிவா எம்.எல்.ஏ, டி.ஆர்.ஓ.பரமேஸ்வரி, மாவட்ட துணைச் செயலாளர் இளந்தரையன், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி.முரளி, மைதிலி இராஜேந்திரன், கிளியனூர் கே.ஆர். எஸ்.இராஜி, கோலியனூர் தே.முருகவேள், நகரச் செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, அன்புமணி, ப.அன்பரசு, உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## மயிலாடுதுறை, கொள்ளிடம் ஒன்றியத்தில்

# திட்ட பணிகளை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேரில் ஆய்வு !

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., செ.இராமலிங்கம் எம்.பி., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

*நாகை, மே16-*

மயிலாடுதுறை மாவட்டத்தில் மயிலாடுதுறை ஒன்றியம் மணக்குடியில் ரூ. 24 கோடி செலவில் நடைபெற்றுவரும் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளையும், மணக்குடி புவேந்திரன் வாய்க்கால் ரூ. 11.80 லட்சம் செலவில் தூர்வாரும் பணியினையும், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் அனுமந்திபுரத்தில் கூட்டுறவு நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரத்தினை நேரில் ஆய்வு செய்தார். பின்னர் அனுமந்திர புரத்தில் சுகாதார துறையின் சார்பில் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் பணிகளையும் ஆய்வு செய்தார். அதைத் தொடர்ந்து கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம் திரும்பிலாடி, முதலைமேடு, ஆணைக்காரன்சத்திரம், நாதல்படுகை ஆகிய இடங்களில் வெள்ள பாதிப்புகளில் பொதுமக்களை பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக ரூ. 16 கோடியில் பேரிடர் மீட்பு மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினையும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டு பணிகளை ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது. மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் உள்ளிட்ட ஏராளமானவர்கள் உடன்இருந்தனர்.

முன்னதாக மயிலாடுதுறை மாவட்டம் மணக்குடியில் ரூ. 24 கோடி செலவில் நடைபெற்று வரும் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களுக்கு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டியளிக்கையில்:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள பெண் சமூக சீர்த்திருத்தவாதி மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களின் திருவுருவச் சிலையை 10.5.2023 அன்று திறந்து வைத்தார்கள். மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின் கீழ் நீர்வள ஆதார துறையின் மூலம் ரூ.8.60 கோடி செலவில் 51பணிகள் 749 கி.மீ. தூரம் பாசன வாய்க்கால்கள் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இந்த மாதம் 31ம் தேதிக்குள் முடிவடையும்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைப்படி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் வழிகாட்டுதலின் படி மயிலாடுதுறையில் ரூ. 24 கோடி செலவில் 9314 சதுர மீட்டர் பரப்பளவில் பணிகள் நடைபெற்று வருகின்றன. புதிய பேருந்து நிலையத்தின் அருகில் புறவழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். சென்ற ஆண்டு குறுவை தொகுப்பு வழங்கியது போல இந்த ஆண்டும் குறுவை தொகுப்பு விவசாயிகளுக்கு குறித்த நேரத்தில் வழங்கப்படும். தமிழகத்தில் அதிகமான காப்பீடு தொகை பெற்ற மாவட்டம் மயிலாடுதுறை மாவட்டமாகும். சிறந்த மாவட்டமாக உருவாக்க முதலமைச்சர் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டியளித்தார்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த ஏ.கே.சுப்பையா அவர்களின் 27வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான திருவாரூர் மாவட்டம் சித்தமல்லியில் தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே.எஸ். விஜயன் தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்று ஏ.கே.சுப்பையா அவர்களின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 3,702 கன அடி!

*மேட்டூர், மே 16-*

மேட்டூர் அணைக்கு நீர்வரத்துவிநாடிக்கு5,253கனஅடியாக இருந்த நிலையில் 4,489 கன அடியாக குறைந்தது. தொடர்ந்து நேற்று முன்தினமும் நீர்வரத்து குறைந்துவிநாடிக்கு3,702கன அடிவீதம்தண்ணீர்அணைக்கு வந்து கொண்டிருக்கிறது.

அணையில்இருந்துகுடிநீர் தேவைக்காகவிநாடிக்கு1,500 கனஅடிவீதம்தண்ணீர்காவிரி ஆற்றில் திறக்கப்பட்டு வருகிறது. நீர் திறப்பை விட வரத்து அதிகமாகஉள்ளதால்,அணையின்நீர்மட்டம்உயர்ந்துவருகிறது. நேற்று முன்தினம் 103.70 அடியாக இருந்த நீர் மட்டம், நேற்று முன்தினம் காலை8மணிஅளவில்103.82 அடியாக உயர்ந்தது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புழல் எம். ஜெயபால்
### மே 16 (2013)



திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியம், செங்குன்றம் பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்ட தோழர்களில் இவரும் ஒருவர்.

கல்லூரியில் படிக்கும் காலந்தொட்டு தி.மு.க. மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியவர்.

புழல் ஒன்றிய பெருந்தலைவராகவும், மாநில பெருந்தலைவர்கள் மன்ற செயலாளராகவும், சைதை தாலுக்கா வேளாண் விளைபொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கத் தலைவராகவும் சிறப்புற பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும், மாவட்ட இலக்கிய அணி புரவலராகவும், பொதுக்குழு உறுப்பினராக இருமுறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**